Registered No. M. 5068

# ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0]  ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள்.  [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ சித்திரைமீ 14௳ 26—4—1948 ஹிஜிரி 1367 ஜமாதிலாஹர்மீ 16௳ திங்கட்கிழமை. } இதழ் 14

## ஸேவையே நமது லக்ஷியம்.

ஆகஸ்ட் 15-க்குப்பிறகு ஏற்பட்ட மாறுதல் நம்மை விழிப்புறச்செய்யப் போதுமானதாக இருந்தது. ஆயினும் நாம் விழிப்படையவில்லை. இந்தியாவைவிட்டு பாகிஸ்தானுக்குச் சென்ற முஸ்லிம்களில் ஏராளமானவர்கள் திரும்ப வந்துவிட்டனர். வந்துகொண்டும் இருக்கின்றனர். தலைமுறை தலைமுறையாய் வாழ்ந்துவந்த நாட்டைவிட்டு சொர்க்கபூமியாக இருப்பினும் அதில் நிம்மதியாக வாழமுடியாது என்பதற்கு வேறு அத்தாட்சி ஒன்றும் தேவையில்லை பாகிஸ்தானைவிட்டு வெளியேறிய ஹிந்துக்களும் பல்லாயிரக்கணக்கில் லாகூர் போய்விட்டனர். போய்க்கொண்டும் இருக்கின்றனர் என்று செய்திகள் கிடைத்தும் வருகின்றன தங்களுடைய வாழ்க்கையை மீண்டும் துடங்க அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கும் என்பதை எண்ணிப்பார்க்காமல் இருக்கமுடியாது. துரதிர்ஷ்டவசமாக இன்றைக்கும் அநேக முஸ்லிம் குடும்பங்கள் வீண் பீதியின் காரணமாக பாகிஸ்தானுக்கும், ஹைதராபாத்துக்கும் போய்க்கொண்டிருக்கின்றன. அதனால் இந்தியாவும் இந்திய முஸல்மான்களும் குறிப்பாக பாகிஸ்தானும் பாதிக்கப்படும் என்பதை அவர்கள் உணருவதில்லை.

முஸ்லிம்கள் வெளியேறுவதைத் தடுக்க ‘ஆஸாத்’ முயற்சிக்காமல் இருந்தால் கடமையைச் செய்ய தவறிவிட்டதென்றே சொல்லவேண்டியிருக்கும். பதிமூன்று நூற்றாண்டுகளாக வாழ்ந்துவந்த தங்கள் மூதாதையர் நாட்டைவிட்டு வெளியேறாமல் இருக்க முஸ்லிம்களுக்கு இரண்டு விஷயங்கள் உணர்த்தப்படவேண்டியதவசியம்.

முதலாவதாக பாகிஸ்தான்மீது முஸ்லிம்களுக்கு இருந்துவரும் பற்று நீங்கினாலன்றி ‘ஆஸாத்’ தன்னுடையவேலையில் வெற்றியடைய முடியாது. அதற்காக கடந்த பத்து வருஷங்களாக நடந்து வந்த வேற்றுமை பிரசாரம் உண்மையல்லவென்று நிரூபித்துக் காட்டப்பட வேண்டும் பிறகு சகோதரத்துவம், சமத்துவம், சகிப்புத்தன்மை, பரஸ்பர நல்லெண்ணம், தன்னம்பிக்கை வளர்க்கப்படவேண்டும். “பாகிஸ்தானும் ஒரு லௌகீக ராஜ்யமே. அங்கும் குறைகளும் ஊழல்களும் இருக்கத்தான் செய்கின்றன. அதை இஸ்லாமிய ராஜ்யமென்று அங்குபோய்ச் சேர்ந்தமாத்திரத்திலேயே சகல கஷ்டங்களும் நீங்கி சுகவாழ்வு வாழமுடியும் என்று இருந்துவரும் நம்பிக்கை தவறானது” என்று முஸ்லிம்களுக்கு தெளிவாக்கப்படவேண்டும். அதைத்தான் “ஆஸாத்” செய்து வருகின்றது

இரண்டாவதாக இந்தியா ஒரு ஜனநாயக நாடு. ஜாதிமதபேதமின்றி அனைவருக்கும் அதில் சமஉரிமை உண்டு. நாம் வெளியேறாத வரையில் நம்மை யாரும் வெளியேற்றத்தயாரில்லை. இந்திய சமுதாயத்தில் புறக்கணித்துவிடமுடியாத முக்கிய அங்கமாகமுஸ்லிம்களாகிய நாம் இருந்து வருகின்றோம். ஐக்கிய சமுதாயத்தை உருவாக்கி சுபிட்ச, முன்னேற்ற, நவ இந்தியாவை உருவாக்கும் மகத்தான வேலையில் நம்முடைய பங்கை கௌரவமான முறையில் செய்ய நாம் முன்வர வேண்டும். இந்திய சமுதாயத்தில் கண்ணியமான ஸ்தானம் வகிக்கும் முஸ்லிம்கள் வீண் பீதியாலோ தவறான ஆசையாலோ இந்தியாவைவிட்டு வெளியேறுவது சரியல்ல என்று முஸ்லிம்களுக்கு எடுத்துச் சொல்

லியாகவேண்டும். அவ்விதக் கடமையை "ஆஸாத்" செய்யாமலிருக்க வேண்டுமென்று எந்த ஒரு முஸ்லி மும் விரும்ப முடியாது.

இந்தியாவில் முஸ்லிம்களுக்கு அபாயம் ஏற்பட்டு விட்டதென்பதை சில நிமிஷங்களுக்காக உண்மை யென்றே வைத்துக்கொண்டாலும் இதர முஸ்லிம்களை அபாயத்தில் விட்டு விட்டு தங்களை மட்டும் பாதுகாத் துக்கொள்ள வெளியேறுபவர்களை முஸ்லிம்கள் என்றோ, இந்தியர்கள் என்றோ எப்படிச் சொல்லமுடி யும். பிரிவினையால் ஏற்கனவே முஸ்லிம்களின் கட் டுக்கோப்பு தகர்ந்து விட்டது. மேலும் முஸ்லிம்கள் வெளியேறுவதால் ஏற்படக்கூடிய மோசமான நிலைமை யைக் குறித்து 'ஆஸாத்' எச்சரிக்காமல் இருக்க முடி யுமா? இந்தியாவே நம் தாயகம்; பாகிஸ்தானல்ல என் பதை உறுதியுடன் நம்பினல் முஸ்லிம்கள் எவ்வித அபாயத்தையும் தவிர்க்க முடியும். பாகிஸ்தானுக் காக பல துன்பங்களை சகித்த முஸ்லிம்களின் மனம் புண்பட்டிருப்பது வாஸ்தவமே. அதில் கோவிடுவது நம்வேலையல்ல. நடந்தது நடந்தேறி விட்டது. அரசியல் உலகத்தில் தவறு செய்வதும், ஏமாறுவதும் சகஜமே. ஆனல் இனியொரு முறை யும் முஸ்லிம்கள் ஏமாருமல் இருக்க வேண்டும் என்றே 'ஆஸாத்' விரும்புகின்றது. நாம் எழுதுவதை நம்பத் தயாராய் இல்லாவிட்டாலும் பாகிஸ்தானுக்குச் சென்று அங்கு நடப்பதை நேரில் பார்த்து கஷ்டப்பட்டு திரும்பி வந்தவர்கள் எழுதுவதையாவது பார்த்து முஸ்லிம்கள் வெளியேருமல் இருப்பார்கள் என நம்பி னோம். தவருன நம்பிக்கையால் வெளியேறும் முஸ் லிம்களுக்கு உண்மையை உணர்த்த வேண்டுமென்று திருச்சியைச்சேர்ந்த S. R. பாஷா தான் பாகிஸ்தா னில் நேரில் கண்டவைகளை "பாகிஸ்தான் டைரி" என்ற தலைப்பின்கீழ் 'ஆஸாதில்' வெளியிட வேண்டு மென்று கேட்டுக் கொண்டதற்கு இணங்கினோம். பாகிஸ்தானிலிருக்கும் குறைகளை எடுத்துச்சொல்வது "ஆஸாதின்" நோக்கமல்ல.

இனியாகிலும் முஸ்லிம்கள் நிலைமையை சரிவர உணர்ந்து தங்களுடைய கடமையை செய்ய முன்வரு வதற்காக 'ஆஸாத்' உழைக்கின்றது. பொதுவாக இந்திய சமுதாயத்திற்கும் குறிப்பாக முஸ்லிம் சமூகத் துக்கும் சேவைசெய்வதே 'ஆஸாத்' லட்சியம் கடந்த கால அர்த்தமற்ற மனக்கசப்பை நீக்கி தேசிய சகோ தரர்களுடன் சேர்ந்து முஸ்லிம்கள் தேசத்தை முன் னேற்றி சுகவாழ்வு வாழவேண்டு மென்பதே நமது குறிக்கோள். அதற்காகவே பெரும் நஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் 'ஆஸாத்' பணியாற்றி வருகின் றது. மெலெழுந்த வாரியாக படித்து குறைகூறு வதைவிட்டு 'ஆஸாத்' வெளியிடும் உன்னத கருத்துக் களை கருத்தில் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

### பாகிஸ்தானில்

# அகதிகள் அவதி.

கராச்சி, 15-4-48.

கராச்சி முஸ்லிம் லீக் பத்திரிகை ஒன்று பாகிஸ் தான் போலீசாரின் மிருகத்தனமான நடத்தையை கண்டித்து கீழ்வருமாறு எழுதுகின்றது. "பாகிஸ் தான் வந்த முஸ்லிம் அகதிகளில் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கானவர்கள் இந்தியா திரும்பிச் சென்று கொண்டிருக்கின்றனர் "இந்தியா திரும்பிச் செல்லும் முஸ்லிம் அகதிகள் கூட்டம், மிகவும் அதிகமாயிருப் பதால், அவர்களை அவரவர்களுடைய வீடுகளில் சேர்ப் பிக்க இந்திய சர்க்கார் பிரத்யேக ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருந்தது" என்று கராச்சியிலிருக்கும், இந் திய ஹை கமிஷனர் காரியாலயத்திலிருந்து வெளி யாயிருக்கும் அறிக்கை கூறுகிறது."

'பாகிஸ்தானுக்கு வந்ததைக் காட்டிலும் அதிக வேகத்துடன் முஸ்லிம் அகதிகள் திரும்பி பாகிஸ் தானைவிட்டு போய்க் கொண்டிருக்கின்றனர். இந்திய யூனியனில் கொண்டு போய்விட அவர்களுக்காக ஸ்பெஷல் ரயில்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. பாகிஸ்தானில் அகதிகள் கண்ணியமற்ற முறையில் நடத்தப்படுகின்றனர். லீக் பிரமுகர்களும், பத்திரிகைகளும் அகதிகள் பிரச்னைக்கு பரிகாரம் காணுமாறு பாகிஸ்தான் அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றனர். அப்படிச் செய்யப் படாவிட்டால் பாகிஸ்தான் அஸ்திவாரம் ஆட்டம் கண்டுவிடும்.'

பர்னஸ் ரோட் சம்பவத்தைக் குறித்து அந்த பத்திரிகை அரசாங்கத்தின் போக்கை கீழ்வருமாறு வன்மையாக கண்டித்திருக்கிறது.

"இஸ்லாமிய ஆட்சியில் இஸ்லாமிய ஒழுக்கம், நாகரீகம் ஒரு புறமிருக்க மனிதனின் பூர்வாங்க கொள்கைகளும் கவனிக்கப்படவில்லை. அலங்கோல டில்லியைச் சேர்ந்த அலங்கோல அகதி குடும்பம் ஒன்றை பர்னஸ் ரோட்டில் உள்ள ஒரு வீட்டி லிருந்து வெளியேற்ற கராச்சி போலீஸ் வந்து சேர்ந் தது. அச்சமயம் ஆண்கள் ஒருவரும் வீட்டில் இருக்க வில்லை. பர்தா பெண்கள் போலீசாரால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். போலீசாரின் சூரத்தனத் தால் அநேக பெண்கள் காயமடைந்தனர். கொடுமைக்குள்ளான அகதிப் பெண்கள் மௌலானா ஷப்பீர் அஹமத் உஸ்மானியின் தலைமையில் பாகிஸ்

(12-ம் பக்கம் பார்க்க)

# பொருளாதாரம்.

—( தராசு )—

"அருளில்லார்க் கவ்வுலகமில்லை, பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை" என்றபழமொழியின்படி, பொருளாதாரமே மனிதனுடைய வாழ்க்கை வளர்ச்சிக்கு புதிய உணர்ச்சியைக் கொடுக்கிறது. அரசியல் என்றால் என்னவென்று தெரியாத சாதாரண மனிதன்கூட, பொருளின் உண்மையான நிலையை யறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. சமூகத்தின் உயர்வு, தாழ்வு போன்ற வேற்றுமைகள் பொருளினால் சீர் செய்து விட முடியும் என்பது பலருடைய கருத்தும், வாதமுமாகும். விலைவாசிகளின் உயர்வு, தாழ்வு, வியாபாரங்களின் முறிவு, உண்டியல் கடைகளின் முறிவு போன்றவைகள் பொருளாதாரத்தின் அடிசுவட்டைப் பின்பற்றியேதானிருக்கிறது. நிலங்களில் சிலவிடும் பொருள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகின்றதோ, அதற்குத்தகுந்த பலனை சிலகாலம் வரையில்தான் அடைய முடிகிறது. குறிப்பிட்ட காலத்திற்குப் பின், நிலம் கொடுக்கும் பிரதி பலன் குறைந்துவிடுகிறது.

இம்முறையினால்தான் பொருளாதார நிபுணர்கள் 'Law of Diminishing returns' என்கிறார்கள். மேலும் இக்காலத்தில் நிலத்தின் மேல் சிலவிடும் தொகைக்கும், வருமானத்துக்கும் அரசாங்கத்தின் வரியும் பெருஞ்சுமையாகவே தானிருந்து வருகிறது இம்முறைகள் விவசாயத்துக்கு தீமை செய்யும் மார்க்கம் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

சமூகம் என்ற கட்டுணர்ச்சியானது என்றைக்கு மனிதர்களைப் பிடித்துக் கொண்டதோ, அன்று முதலே பொருளாதாரத்தின் பிடிப்பும் சமூகத்துக்கு இன்றியமையாததாய் விட்டது. ஒவ்வொரு மனிதனும், தன்னுடைய நடவடிக்கைகளுக்கு பொருளாதார சட்டத்தின்படிதான் நடக்க முடிகிறது இம்மாதிரியான சட்டங்கள் சரிவர தன் வேலையைச் செய்யாவிடினும், தாற்காலிகமாக நிறுத்தினாலும் சமூகத்தின் அமைப்பும், அமைதிக்கும் பெருத்த பங்கமேற்பட்டு, புதிய துன்பங்களை அனுபவிக்க நேரிடுகிறது.

இதனால்தான் அரசாங்கம், பொருளாதாரத்தின் நிலையை விளக்கி மக்களுக்கும், உண்டியல் கடைகளுக்குமறிவித்து பொருளின் தடங்கலேற்படா வண்ணம் செய்துவருகிறார்கள். அரசாங்கத்து நிதி இலாகாவிற்கும், தனி மனிதனாகவோ அல்லது கூட்டாகவோ நடத்தும் உண்டியல் கடைகளுக்கும் பொதுவான முறையில் தொடர்பு இருக்கிறது. உண்டியல் கடைகளைப்பற்றி மக்கள் அறிந்துகொள்ள முடிவதைப் போன்று அரசாங்க நிதி இலாகாவைப் பற்றி அறிந்து கொள்ள முடியவில்லை. இதற்குக் காரணம் நிர்வாக பரிபாலன இனங்கள் அரசாங்கத்திலிருப்பதால் அதை மக்கள் அறிந்துகொள்ள முடிவதில்லை. முன் காலத்தில் அரசாங்கத்தின் பொக்கிஷத்தில் பொருள் நிறைந்திருக்கும். மேன்மேலும் அதை விருத்தி செய்து கொண்டிருந்தார்கள். இப்பொழுதுள்ள அரசாங்கம் அடிக்கடி கடன் வாங்க வேண்டிய நிலையில் இருந்து வருகிறது ; இதற்குக் காரணம் ஜனத்தொகை, வருமானம், சிலவு முதலியவைகள் நிலையில்லாமலிருப்பதுதான். சுதந்திரம் பெற்ற நாட்டில் முதன் முதலில் பொருளாதாரத்தைத் தான் சீர் செய்ய வேண்டும் ; இதற்கு கொஞ்ச காலம் செல்ல வேண்டும். முன் காலத்தில் அரசாங்கம் கடன் வாங்க முடியாது ; கடன் கொடுப்பவர்களுமில்லை. ஆங்கிலேயர்கள் இந்த நாட்டிற்கு வந்த பிறகுதான் கடன் வாங்கும் வழியை அரசாங்கம் பின்பற்றிற்று. சாதாரண மனிதன்கூட தன் சக்திக்கு மீறி கடன் வாங்க முற்பட்டுவிடுகிறான், இதற்குப் போதுமான வசதிகள் அரசாங்கத்தால் செய்யப்பட்டிருக்கின்றன. ஆங்கில அரசாங்கம் சுரண்டலையே முதன்மையாகக் கொண்டிருந்ததினால் மக்கள் கடன் வாங்குவதன்மூலம் அவர்கள் அரசாங்கத்திற்கு வருமானம் தேடிக்கொண்டிருந்தார்கள். கடன் வாங்கும் பழக்கத்தினால் விவசாயிகள் கடன் பளுவைத்தாங்காது வாடுகின்றனர். பொருளாதாரமானது சரியானமுறையில் அமையவேண்டுமேயானால் அரசாங்கமும், தனி மனிதனும் கடன் வாங்க வசதியிருக்கக் கூடாது இதைச் செய்வதற்கான முறைகளை யார் கையாள்வது என்பதுதான் புரியவில்லை?

பொருளாதாரம் என்பது தத்வம், கணிதம், அரசியல் முதலிய சாத்திரங்களை உள்ளடக்கிக்கொண்டு இருக்கிறது. சாத்திரமென்பது மனிதனுக்கு ஒரு புதிய தத்துவத்தை கற்றுக்கொடுத்து குறிப்பிட்ட பாதையில் பயன் தருவதேயாகும். சாத்திரத்தை எழுதுபவன், படிப்பவன், அனுபவிப்பவன் ஆகியவர்கள் மனித சமூகத்தினர். சமூகத்தினுடைய நன்மையும் தீமையும் அரசாங்கத்தின் போக்கை ஒத்தேயிருக்கிறது. அரசாங்கம் பொதுமக்களுடைய சுதந்திரத்தை பாதுகாக்கவேண்டும். அதேபோல் நாட்டின் செல்வப் பெருக்கிற்கும் அமைதியான வாழ்க்கைக்கும் அரசாங்கமே பொறுப்பு. பொருள்களின் உற்பத்தி, பங்கீடு,

# ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை.

மலர் 1 | 26—4—'48 திங்கட்கிழமை | இதழ் 14


## இன்னுமா துஷ்பிரசாரம்?

கூடைய நல்லூர் பத்ருல் இஸ்லாம் சங்க காரியாலயத்தில் 29—3—48-ந்தேதி கூடிய கூட்டத்தில் நிறைவேறிய நான்கு தீர்மானங்களை 4—4—48 'முஸ்லிம்' தினசரி பிரசுரித்திருக்கின்றது. இந்திய முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் முஹம்மது இஸ்மாயில் மீதுநம்பிக்கை தெரிவித்தும், முஸ்லிம் லீக் சட்ட சபைக் கட்சியிலிருந்து விலகப்போவதாக அறிவித்திருக்கும் ஒன்பது எம். எல். ஏ.-க்கள்மீது, முஸ்லிம் சமூகத்தைக் காட்டிக்கொடுக்கும் நயவஞ்சகக் காரர்களின் பொய்ப் பிரசாரத்திற்கோ அல்லது சுய நலப்பதவி மோகத்திற்கோ அடிமைகளாகிவிட்டதாக வசை புராணம் பாடியும், இந்தியாவிடம் விஸ்வாசம் தெரிவித்தும், முஸ்லிம்கள்மீது தபபு பிரசாரம் செய்யும் அநாமதேய பேர்வழிகள்மீது நடவடிக்கை எடுக்க சர்க்காரை வேண்டிக்கொண்டும் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. "முஸ்லிம் சமூகத்தைப் பழித்தும் முஸ்லிம்களுக்குள் பிளவை உண்டுபண்ணவும் முயற்சித்துவரும் 'ஆஸாத்' என்னும் போலிப் பத்திரிகையைத் தமிழ்நாட்டு முஸ்லிம்கள் பகிஷ்கரிக்கும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது" என்பது நான்காவது தீர்மானம். 'ஆஸாத்' செய்துவரும் உன்னத சேவையை தமிழ் நாடெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் பாராட்டி அனுப்பியிருக்கும் செய்திகளை பிரசுரித்து பத்ருல் இஸ்லாம் அன்பர்களிடம் சர்டிபிகேட் பெறவேண்டிய அவசியம் நமக்கில்லை. முஸ்லிம் பொதுமக்களை காங்கிரஸ் கூட்டங்களில் கலக்க வேண்டாமென்றும் காங்கிரஸ் முஸ்லிம்களின் பேச்சு கேட்கவேண்டாமென்றும் கட்டுமானம் செய்து பாமர முஸ்லிம் பொதுமக்களை அந்தகாரத்தில் ஆழ்த்தி வைத்திருந்த காலம் மலையேறிவிட்டது. நெருக்கடியான இச்சமயத்தில் முஸ்லிம்களுக்கு சரியான வழி காட்ட முன்வராமல், இருக்குமிடம் தெரியாமல் அக்ஞாத வாசம் செய்துவரும் லீக் லீடர்களின் பேச்சைக் கேட்க முஸ்லிம் பொதுமக்கள் தயாராக இல்லை என்பதும் நமக்கு நன்ருகத் தெரியும் சங்க காரியாலயத்தில் இரட்டைத்தாழ்ப்பாள் போட்ட கதவுகளுக்குள் உட்கார்ந்துகொண்டு தீர்மானம் நிறைவேற்றிவிட்டு முஸ்லிம்களுக்கு சேவைசெய்துவிட்டதாக நினைப்பது பைத்தியக்காரத்தனமாகும். பத்ருல் இஸ்லாம் அன்பர்களின் அறியாமையைக் குறித்துவருந்தாமலிருக்க முடியாது. லீக்கை இஸ்லாம் என்றும் லீகர் என்ற சொல்லுக்கு முஸ்லிம் என்றும் அர்த்தம் செய்வது அறியாமை. லீகைப் பழிப்பது இஸ்லாமைப்பழிப்பதல்ல. லீகர்களை சிதறடிப்பது முஸ்லிம்களைப் பிளவுபடுத்துவதல்ல. நியாயமாகச் சொல்லவேண்டுமென்ருல் இன்று இஸ்லாமுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டிருக்கும் கெட்ட பெயருக்கு லீக்கும், லீகர்களும் தான் காரணம். எனவே "லீகர்களைப் பழித்தும் முஸ்லிம்களிடையே லீக் ஏற்படுத்திவிட்ட பிளவை போக்கவும் முயற்சித்துவரும் 'ஆஸாத்' என்னும் உண்மைப் பத்திரிகையை தமிழ்நாட்டு லீகர்கள் பகிஷ்கரிக்கும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது" என்று தீர்மானம் நிறைவேற்றியிருந்தால் அதை நாம் ஆட்சேபித்திருக்க முடியாது. லீகர்களாயிருப்பினும் பத்ருல் இஸ்லாம் நண்பர்களுக்கு ஏதோ கொஞ்சம் அறிவு இருப்பதாகக்கூட நினைத்திருக்கமுடியும். அப்படிச்செய்யாமல் தங்களுடைய அறிவீனத்தை அம்பலப்படுத்திக்கொண்டவர்கள் மீது இரக்கப்படாமல் வேறென்ன செய்வது! இந்தியாவில் இனி வகுப்புவாத ஸ்தாபனங்களுக்கு அரசியலில் இடமில்லை என்று இந்திய பார்லிமெண்டில் தீர்மானம் நிறைவேறிய பின்பும் லீக்மீது நம்பிக்கை தெரிவித்து லீகை விட்டு விலகுபவர்களைத் திட்டக் கூடியவர்கள், இந்தியாவிடம் விசுவாசம் தெரிவித்துக்கொள்வது எவ்வளவு தூரம் உண்மை என்பதை அவர்கள்தான் தெளிவுபடுத்தவேண்டும். இம்மாதிரியான ஒரு சில அநாமதேயங்களின் விஷமத்தனமான பேச்சால் நாலரைக் கோடி முஸ்லிம்கள் நம்பிக்கை இழந்துவருகின்றனர். லீகின் பெயரால் இந்திய முஸல்மான்களின் கட்டுக்கோப்பையும் ஐக்கியத்தையும் குலைத்து ஐந்து கோடி முஸ்லிம்களை வெள்ளையர்களுக்கு அடிமைகளாக்கி, நாலரைகோடி முஸ்லிம்களை இந்தியாவில் பரதவிக்கவிட்டு லக்ஷக்கணக்கான மக்கள் கொல்லப்படவும், கோடிக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து பரதேசிகளாய் திரியவும், இந்தியாவின் நல்ல பெயருக்கு களங்கம் ஏற்படுத்திவிட்ட விஷமிகள் இன்றைக்கும் இங்கிருந்துகொண்டு விஷமப் பிரசாரம் செய்வது இந்திய முஸல்மான்களுக்கு வெடிவைப்பதாகும். அவர்கள் பேசாமல் புறப்பட்டு பாகிஸ்தானுக்குப் போவதுதான்

முதலாளி, தொழிலாளி, கடன், வாடகை, முதலிய வைகளும், அரசாங்கத்தின் நிலைக்கொத்தவாறு மாறு தலடைகின்றன. பிரிட்டன், அமெரிக்கா, முதலிய தேசங்களில் சுய உரிமையை (Private Property)ப் போன்ற முறைகளும், சமதர்மக்கொள்கை (Common owner ship)யைப்போன்ற ருஷியா தேசத்து முறைக்கும் அடிப்படையிலேயே வித்தியாசமிருக்கிறது.

மனிதன் சுயநலத்தில் பற்றுக் கொண்டவனுன படியினுல், தான் கஷ்டப்பட்டு சேகரிக்கும் பொருளை தானே யனுபவிக்க வேண்டும் என்ற எண்ணமும், இந்த கருத்துக்கு அரசாங்கமும் சுதந்திரமளித்திருப்பதால், உற்பத்தி செய்கிறவன், உற்பத்தியில் அதிக கவனம் செலுத்துகிறுன். சமதர்மக் கொள்கையை யனுசரிக்கும் போது தனி மனிதனுடைய சொத்துரிமையை கண்டனம் செய்வதால் உற்பத்தி குறைவுபடுவதுடன் குடும்பத்திலிருக்க வேண்டிய அன்னியோன்னிய அன்பானது குறைந்தும் மக்கள் எல்லோருமே யந்திரங்களாகிவிடுகிறுர்கள்; இதனுடைய முடிவு மனிதர்கள் தங்களுடைய நிலைமைக்கேற்றபடி வேலை செய்ய வேண்டியது போய், வேலை நேரம் குறைந்து, சுபாவத்தன்மையிலேயே சிறிதளவு சோம்பேறியாகி விடுகிறுன் என்பது திண்ணம்.

---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கௌரவமானசெய்கை. இங்குள்ள முஸ்லிம்கள் லீகின் வண்டவாளத்தை உணர்ந்துவிட்டனர். பாகிஸ்தானுல் தங்களுக்கு இம்மியளவு நன்மையும் ஏற்படமுடியாதென்றும் தெரிந்துகொண்டுவிட்டனர். சர்க்கார் மாளிகையைப்போன்ற பந்தோபஸ்தான இடத்திலே உட்கார்ந்து லீகை புனருத்தாரணம் செய்யலாம். பத்ருல் இஸ்லாம் சங்க கட்டிடத்துக்குள் கூடி உளரலாம். ஆனுல் முஸ்லிம் பொதுமக்களிடையே இனி லீகைப்பற்றிப் பேசி யாரும் உயிருடன் தப்பித்துக் கொண்டு போகமுடியாது. விசுவாசம் என்று கூச்சலிடும் பேர்வழிகள் 'ஆஸாதை'க்கண்டு பயப்படுவதன் காரணம்தான் தெரியவில்லை கடந்த பத்து வருஷகால பிரசார விஷம் மண்டைகளை விட்டு இன்னும் இறங்கவில்லை என்பதையே அது காட்டுகிறது. ஐந்து கோடி முஸ்லிம்களை வெள்ளையர்களுக்கு அடிமைகளாக்கிவிட்ட பிறகும் ஜனநாயக இந்தியாவில் அதிர்ஷ்டவசமாக தங்கிவிட்ட நாலரைகோடி முஸ்லிம்களேயும் நிம்மதியாக வாழவிடாமல் விஷமத்தனம் செய்துவரும் வெள்ளை ஏஜண்டுகளின் கூட்டம் மாண்டு மறைந்தாலன்றி இந்த நாட்டுக்கும் முஸ்லிம்களுக்கும் நன்மை ஏற்படுவது சாத்தியமில்லை.

---

இம்முறையைப்பலர் சரியாக எடுத்துக்காட்டியும் கூட, சமதர்மக்கொள்கையில் மாறுபட்ட கருத்துள்ளவர்கள் இதை ஒப்புக்கொள்வதில்லை. எல்லோருமே வேலை செய்யவேண்டும். பணக்காரன், ஏழை என்ற வேறுபாடு இருக்காது என்று சிலர் கூறுவதால், இந்தக் கொள்கையை ஒன்றுமறியாத ஏழைமக்கள் ஆதரிக்கின்றனர். இன்றுள்ள நிலைமையில் பணக்காரர்களும் தங்களுடைய போக்கைக் கொஞ்சம் மாற்றிக்கொள்வதுதான் நலம்.

இரண்டாவது உலக மஹாயுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது ரஷ்யாவைப் பார்வையிட்ட, பலர் அந்நாட்டிலுள்ள ஜனத்தொகைக்குத் தக்கபடி உற்பத்தி இல்லை. மக்களில் பெரும்பாலோர் வேலை செய்ய வேண்டிய நேரத்தில், வேலை செய்வதுபோலிருப்பதால் உற்பத்திபெருக்கம் தடைபடுகிறது என்று கூறினுர்கள். இதனைக்கொண்டு பார்க்குமளவில் உற்பத்தியும், டங்கீடும் சோம்பலில்லாத முறையில் அமையவேண்டும் என்று அறியமுடிகிறது. சுதந்திர வியாபாரம், (Monopoly) ரயில், நீர்ப்பாய்ச்சல், ஆக்கல், அழித்தல்(Production and Consumption) ஆகியவைகள் பொருளாதாரத்திற்குட்பட்டிருப்பதால், இவைகளைப் புதிய முறையில் மாற்றியமைக்க வேண்டியது அவசியம். அரசாங்கத்தின் சட்டங்களால் பொருளாதாரத்தைக்கட்டுப்படுத்தி, அரசாங்கத்தை நடத்த மக்களிடமிருந்தே வரியைப்பெற்று நடத்துவதுதான் இனி நேர்மையான முறை. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களும், பாதிக்கப் படாதபிரதேசங்களுக்குட்பட்டோ, அடிமையாகவோ இருக்கும் பிரதேசங்கள் யுத்தம் முடிவடைந்தவுடன் பொருளாதாரநிலையில் மாறுதலடையும், வியாபார மந்தம், வேலையில்லாத் திண்டாட்டம், நாணயநிர்வாக நெருக்கடி, சண்டையினுலுண்டான கடன் தொல்லை ஆகியவைகள் பொருளாதாரத்தைத்தான் பாதிக்கும்.

இந்த நெருக்கடியால்தான் பொருளாதார நூலில் ஒரு புது அத்தியாயம் ஆரம்பிக்கிறது. யுத்தத்திற்கு பிற்காலத் திட்டங்களேற்படுத்தி, நிலையை அரசாங்கம் சீர் செய்யாவிடில் பெருத்த ஆபத்து உண்டாகும் என்று ஸீலி என்ற அமெரிக்க நிபுணர் கூறுகிறுர்.

பொருளாதாரத்துக்கு நியாயம் தான் முதுகெலும்பு. ஆக்கல், பங்கீடு, வரிவசூல், நாணயம், நிர்வாகம் இவைகள் நியாயமான முறையில் அமைக்கமுற்பட வேண்டும் உற்பத்தியில் கட்டுப்பாடில்லாவிடினும், வியாபாரம் நிலையற்ற முறையில் பெருகி சமூகத்தின் நிலையும், வியாபாரத்தின் நிலையும் சீர்குலையும். வேலையில்லாத் திண்டாட்டமும் உண்டா

(7-ம் பக்கம் பார்க்க)

# இதை சிந்தனை செய்திடுக.

—[ K. R. பசுபதி, கரூர். ]—

1. செழுமையும், குளிமையும் கூடிக் குலாவிய பாரத தேசம் இது. தார்மீக அடிப்படையில் சீரிய வாழ்வு நடாத்தியது இந்த நாடு இறந்த காலத்திலே! பச்சையும் மஞ்சளும் கலந்த நிறமான கதிர்கள் கம்பீரமாக அசைந்தாடி, நாட்டில் பஞ்சமற்ற கொஞ்சும் நிலையில் வைத்திருந்த மக்கள் மகிழ்ந்த பூமண்டலம் இது! கடமையைத் தவறாது செய்து உடைமையைப் பெற்று உவகையும், பூரிப்பும் பெற்று வாழ்ந்த மக்கள் இங்கு பலர் இருந்தனர். இந்த நாட்டு மக்களின் வாழ்வின் மத்தியிலே ஒளி நர்த்தனம் செய்தது ஓர் காலத்திலே! சமுதாயத்திலே சந்தோஷம் தாண்டவமாடியது ஓர் காலத்திலே! இன்பவெள்ளம் பெருக்கெடுத்தோடியது ஓர் காலத்திலே!

2. அந்தக்காலம் மாறியது. கடும்புயல் வீசியது. தார்மீக அடிப்படையிலிருந்து சமுதாயம் நழுவியது. புயலை நோக்கி படகைச் செலுத்தினர். பாப பயச்சுமைகளைச் சுமந்தனர். கரைகாண வழி தெரியாது தியங்கினர். அகண்டாகாரமான அந்தகாரம் மனிதரைச் சூழ்ந்தது. சுந்தரமான இந்த தேசம் மந்தமான மங்கிய நிலையில் தூங்கியது. ஏங்கினர் ஒரு சில அறிஞர்கள். தூங்கிக்கிடந்த சமுதாயத்தை தட்டியெழுப்ப சங்கமொலித்தது! இந்தியா இனி எழுந்திருக்கக் காந்தி மகான் தோன்றினார். இந்தியாவின் நீல நிறச்சுடர் வீசிடும் தீபஸ்தம்பமாகத் திகழ்ந்தார். அன்பு கொண்டு வெல்ல முடியும் என்ற உண்மையை, சத்தியம் வெற்றிபெறும் என்ற உண்மையை, தன் வாழ்விலே, சத்ய சோதனையிலே நடத்தி நாவலந் தீவினிற்குத் தன் ஸ்ரீதனமாக வைத்துவிட்டு வானகம் புகுந்தார். இந்த ஒற்றுமைப்பட்ட வாழ்வுக்காக, உலகம் இன்புற்று இருக்கவேண்டுமென்பதற்காக வாழ்நாள் முழுவதும் "அன்பு" என்ற மோகன முரளி ஊதியது! அந்த கானத்திலேயே வாழ்வையும் கரைத்துவிட்டார். இந்த நேரத்திலே, மனிதன் கலங்கி, நடுங்கிக் குழம்பிக் கதறித் தவிக்கும் நேரத்திலே, தேசத்தின் பிதா நாசகார எண்ணங்களிற்கு இரையான நேரத்திலே இனி செய்யவேண்டியது என்ன?

3. இருளடர்ந்த வானத்தைப் பார்த்து நிற்கும் இந்த நேரத்திலே, இழந்த தனத்தை, இழந்த சாந்தியை, இழந்த இன்பத்தை, இழந்த பெருமையை மீண்டும் பெற்றுய்ய காந்தீயத்தைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. "காலைக் கதிர் உதிப்பது திண்ணம். காரிருள் கழிவதும் திண்ணம்." என்று? காந்தீயத்தை வாழ்க்கையின் நடுவிலே புகுத்தினால் தான் காந்தீயம் என்பது என்ன? தானும் வாழ்ந்து பிறரையும் வாழவிடுவது. உலக ஒற்றுமையை ஏற்படுத்துவது. மனித சமுதாயத்தை ஒன்று சேர்த்து வைப்பது. "அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு" இதுவே காந்தீயம்.

4. இந்த அன்பு, அறிவு, அறம் இவைகளைப் பின்பற்றாது போவதனால்தான் தேசத்தில் மோசமான நிலையை சிருஷ்டி செய்து நாசமாக்குகின்றது நல்ல சூழ்வுகளை. இந்த நாடு மாத்திரமல்ல; இந்த உலகம் பூராவும் இன்று சாந்தி இழந்து தவிக்கின்றது. எங்கு பார்த்தாலும் பஞ்சம், லஞ்சம், கெஞ்சுதல்கள், நஞ்சு மொழிகள், வெஞ்சினப் போராட்டம், வேலை நிறுத்தங்கள்! இவைகள் யுத்தங்களை சிருஷ்டி செய்யும் இயந்திரத்தின் பல பாகங்கள். இந்த நிலைமையை மாற்றி சுபிக்ஷம் பொங்கி வழிய புதிய ரக புரட்சி இல்லையா? பட்டறையில் வேலை செய்து கேட்டைத் துணைகொண்டுள்ளவன் மட்டமான வாழ்க்கையாவது நடத்த கூலி போதுமானது தர வேண்டாமா? குறைந்த சம்பளம், வாழவசதியற்ற சம்பளம். மனைவியையும், குழந்தைகளையும் பட்டினியால் தவிக்கவிடக்கூடிய அளவுக்குத்தான் சம்பளம் இன்றைய பாமரன் பெறுகிறான். பலர் உழைப்பில் பன்னீரில் குளித்துப் பாங்குடன் வாழ்கின்றான் பணக்காரன. பலருக்குழைத்து பணக்கார உருவங்களை உற்பத்தி செய்யும் பாமரன் பட்டினி இருக்கிறான் இங்கே? அங்குள்ள ஆனந்தத்தையும் இங்குள்ள இருளையும் ஒத்திடும்போது "மனிதனுக்குள் இந்த ஏற்றத் தாழ்வு ஏன்?" இதை ஒழிக்க இனி நாம் செய்யவேண்டியது என்ன? என்பதை கணிக்கும்போதுதான் கண்டெடுக்கிறான் சோஷலிசத்தை! இன்றைய நிலையில் உள்ள சமூக அமைப்பை சமூக (வி) சித்திரத்தை சீர்திருத்தம் செய்ய திரளுகின்றனர். இந்த வேலையைச் செய்ய காந்தீயத்தையே நம்பிக்கையுடன் பின்பற்றுகின்றனர்.

5. பாமரன் பட்டினி கிடக்கிறான். பழங்கஞ்சி பெறவாவது பணம் தா? என்று ஸ்ரீமான் பணக்காரனிடம் கேட்கிறான். "ஒரு பணம் கூலியை உயர்த்

திடுக" என்று கேட்கிருன். இது மறுக்கப்படுகின்றது. தொழிலாளி என்ன பங்களாவும், பாயசம் கலந்த உணவும், போய்வர மோட்டாருமா கேட்கிருன்? இல்லை. இருக்க ஒரு சிறு குடிசை. இரண்டு வேளை உணவு ஒழுங்காகப்பெற போதுமான கூலி. இதைத்தர மறுக்கிறது பணநாயகம். வியாபாரத்தில் நஷ்டம் என்று காரணம் வேறு காட்டுகின்றது. ஆனல் லாபம், கொள்ளை லாபம் பெற்ற காலத்தில் எவ்வளவு அள்ளிக்கொடுத்திருக்கிருர்கள்? அதுதான் பூஜ்யம். இந்த மாபெரும் ஏற்றத் தாழ்வுகள்தான், பணக்காரனின் பெருந்தன்மையற்ற மனப்பான்மைதான், சிறுமைக்குணம்தான் இன்றைய அமைதியின்மைக்குக் காரணம். "வேலை நிறுத்தம் தவறு" என்பவர்கள், வேலை நிறுத்தத்துக்கான காரணம் என்ன? என்பதையும் சிந்திக்கவேண்டும் அன்ருட கூலி பெறும் தொழிலாளியின் வேலைநிறுத்தமானது வேடிக்கைப் பொழுது போக்கல்ல. வேலை நிறுத்தமென்பது விநோத இன்பமல்ல. 'பட்டினியான வயிறுதான் புரட்சியின் பிறப்பிடம்" என்று ஒரு மேனட்டறிஞர் கூறியுள்ளார். பிரெஞ்சிலே புரட்சிக்குமுன் 10 லக்ஷம் பிச்சைக்காரர் (பாமரர், படித்தவர் உள்பட) இருந்தனர். இந்த நிலையை சிருஷ்டி செய்துகொண்டேயிருந்தால் பிரான்ஸின் வீழ்ச்சி இங்கேயும் பிரதிபலிக்கும். தொழிலாளியை வேலை நிறுத்தம் செய்யாதே என்னும்போது. வேலைநிறுத்தத்துக்கான காரணத்தை களைந்து கடு நெருப்பிலிட்டு கிடைக்கும் சாம்பலை கருங்கடலிலே கரைத்துவிடு. தொழிலாளரின் உடனடி பிரச்னைகள் தீர, கூலியை நிர்ணயித்து சட்டமியற்றுங்கள்.

6. இன்று இவ்வளவு மோசமும் நடக்கக் காரணம் என்ன? தார்மீக நிலை நழுவவிடப்பட்டது. இந்து தர்மப்படி பணக்காரன் ஒரு தர்மகர்த்தா. ஏழையைக் காப்பாற்றவே அவனிடம் செல்வம் உள்ளது. ஏழைகளுக்காகவே பணக்காரன். பட்டினி என்ற சொல் வந்தால் பணக்காரனின் தவறு அது. வலிவு உள்ளவன் வாழ்வது, வலிவற்றவனுக்கு உதவி செய்யவே. ஆனல் இந்து என்று பெருமை பேசி பழங்கதைகளும், பகவத்கீதையும் படித்து பகவானை துதித்திடும் இந்து மகன் என்ன செய்கின்ருன்? ஏழைகளுக்காகவே பணக்காரன் வாழ வேண்டும். பண நாயகம் ஒழிந்து, ஜனநாயகம் ஏற்படவே, ஜனங்கள் வாழவே செல்வம் என்ற இந்து மத தர்மத்தை, எந்த இந்து வியாபாரி நடத்துகிருன்? பைசாவுக்குப் பைசா பாமரனைச் சுரண்டுகிருன். மக்களை வதைக்கிருன். இந்து என்று பெருமையுடன் பேசிடும் செல்வந்தன் கொல்லுகிருன் ஏழையை! இதுவா இந்து தர்மம்? ஏழையைச் சுரண்டுவதா இந்து தர்மம்? இந்து தர்மத்தை நழுவவிட்டதனுல்தான் இன்று தேசம் நாசமாகிறது. இவன் உண்மையிலே இந்து தர்மத்தைப் பின்பற்றினுல் இவன் கடைகளில் வேலை நிறுத்தம் ஏற்படாது! இந்து தர்ம கர்த்தா முறையையே காந்தியடிகள் போதித்தார். உண்மையான இந்தியனுக வாழ்ந்திடு என்ருர். தார்மீக வாழ்க்கை தடுமாறுகிறது. சமுதாயமும் மாறுகிறது. இந்து என்பவன் இனியாவது இந்து தர்மத்தைப் பின்பற்றி உண்மையான இந்துவானுல்தான், காந்தியின் லட்சியத்தைப்பூர்த்தி செய்தவனுவான். (தொடரும்)

(5-ம் பக்கத் தொடர்ச்சி.)

கலாம். பங்கீடு விஷயத்தில் மிகவும் கவனம் வேண்டும். தொழிலாளிகளின் உழைப்பிற்கும், குடும்ப நிர்வாகத்துக்கும் போதுமான ஊதியம் அளிக்கப்படாவிடில் பொருளாதார ஸ்தம்பனமேற்படும் என்று காரல் மார்க்ஸ் கூறியிருப்பதை தள்ளிவிட முடியாது. கடன் கொடுப்பவர்கள் அதிகமான வட்டியை மறைமுகமாக கேட்பதால், கடன் வாங்கியவன், கடனைத் திரும்ப கொடுக்க முடியாமல் தன் கடமைகளை இழக்கும்படி நேரிடுகிறது. இதற்கு சீர்திருத்தம் செய்ய அரசாங்கம் பின் வாங்கக் கூடாது. வருஷ வருமானத்தைக் கொண்டுதான் வரியை நிர்ணயிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு பொருளாதார விஷயத்தில் தக்க பயனளிக்கும். தொழிலாளர்களுடைய வாழ்க்கை நிலையை பரிசோதித்து அதற்குத் தக்க நிவாரணம் அளிக்க அரசாங்கம் முன் வராவிடில் தனவந்தர்களுடைய ஆதிக்கம் வேரூன்றி பொருளாதாரம் சீர்குலையும். நாணய நெருக்கடியான காலங்களிலோ, அல்லது அரசாங்கத்துக்கு அதிகமான பொருள் தேவையாக இருந்தாலோ நாணயத்தின் மதிப்பை, கூட்டியோ, குறைத்தோ விடுவதினுலும் விலைவாசிகளின் நிலையில் பெரிய மாறுதலேற்பட்டு பெருந்துன்பமுண்டாகிறது.

மக்களின் நிலைக்குத் தக்கபடி பொருளாதார சட்ட திட்டங்கள் அமைய வேண்டும். பொருளாதார வியாபகத்தில் நாணய நிர்வாகமும், வரிவசூலும் தான் முக்கியம். இவைகளுக்குத்தக்க கணித முறைகளை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். இதை யுத்தேசித்து பிஷர், காஸல் போன்ற அறிஞர்கள் கணிதப் பொருளாதாரம் (Mathematical Economy) என்ற சாத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிருர்கள். இந்த முறையை நமது நாடு உடனடியாக பின்பற்ற வேண்டும். அப்பொழுதுதான் பொருளாதாரம் சரியான முறையில் அமைந்து மக்கள் சுகம் அடைய முடியும்.

# செத்தாலும் இந்தியாவில் சாவோம்

# பாகிஸ்தானில் வாழமாட்டோம்.

:o.

லாஹூர், 18—4—48.

பாவ்லி அகதி முகாமில் போலீஸார் செய்த துப்பாக்கி பிரயோகத்தினுல் இரண்டு அகதிகள் இறந்தனர். நால்வர் காயமடைந்தனர். காயமடைந்த இரண்டு கான்ஸ்டபிள்களில் ஒருவனின் நிலைமை கவலைக்கிடமாய் இருந்து வருகிறது. போலீஸ் முகாம் தாக்கப்பட்டதுடன் தீயிடவும் முயற்சி நடந்தது. ஒரு துப்பாக்கியும், போலீஸ்டைரியும் அகதிகள் பிடுங்கிக் கொண்டனர்.

அகதிகள் இரண்டு கால்நடைகளை அறுத்து முகாமில் மாமிசம் விற்றதைஒட்டி கலவரம்ஆரம்பமாயிற்று. ஸானிடரி இன்ஸ்பெக்டர் நோயுற்றுஇருந்த கால்நடைகளின் மாமிசம் விற்கக்கூடாதென்று தடுத்தார். கேட்காததால் போலீஸார் தலையிட்டு ஒருவனை கைது செய்தனர். உடனே அகதிகள் போலீஸ் முகாமை தாக்கி தீயிட முயற்சித்தினர். கூரைமீது ஏறி தடுக்க முயற்சித்த கான்ஸ்டேபிள் சுட்டுத்தள்ளப்பட்டான். போலீஸார் துப்பாக்கி பிரயோகம் செய்ததில் ஒருவன் இறந்தான். ஸ்தலத்திற்கு விரைந்து வந்த டிப்டி சூப்பரிண்டெண்டின் கார் தாக்கப்பட்டது. டிப்டியின் துப்பாக்கி பிரயோகத்தால் மேலும் இருவர் மரணமும் காயமும் அடைந்தனர். போலீஸ் படையுடன் ஜில்லா கலெக்டர், ஸிடி மாஜிஸ்டிரேட் வந்து அமைதி ஏற்படுத்தப்பட்டது.

பாவ்லி முகாமில் 8,000 குர்கான், பானிபட் அகதிகள் இருக்கின்றன. அவர்களிடம் ஆயுதங்களும் இருப்பதாக சர்க்கார் அறிக்கை கூறுகிறது. கான்ஸ்டேபிள் ஒருவன் கவலைக்கிடமான நிலைமையில் ஆஸ்பத்திரியில் கிடக்கின்றன.

---

மூன்று தினங்களுக்கு முன் துப்பாக்கி பிரயோகம் நடந்துவர பாவ்லி முகாமிலுள்ள ஆயிரக்கணக்கான அகதிகள் உண்ணுவிரதம் இருந்து வருவதாகச் செய்தி கிடைத்துள்ளது. "இந்தியாவில்போய் செத்தாலும் சாவோம். ஆனல் பாகிஸ்தானில் இருக்க மாட்டோம்." என்று அகதிகள் தலைவர் தெரிவித்திருந்தார். அவர்களைத் தடுக்க முகாமைச் சுற்றி ராணுவமும், போலீஸூம் நிறுத்தப்பட்டிருக்கிறது. மிஷின் துப்பாக்கிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

நவாப் மம்தோத்கான் அல்லது லீக் லீடர்கள் யாராவது முகாமுக்குள் பிரவேசிப்பது அவர்களுக்கு நன்மை பயக்காதென்று அகதிகள் பயமுறுத்தியிருக்கின்றனர். "இந்தியாவுக்கு திரும்பிப்போகவே நாம் விரும்புகிறோம். போலீஸ் அக்ரமத்தால் போதுமென்றுவிட்டது. போலீஸார் லஞ்சம் கேட்கின்றனர். அதிகாரிகளிடம் எடுத்துச்சொன்னல் அலட்சியமாயிருந்து விடுகின்றனர். நம்மை சிந்துக்குப் போகும்படி சொல்லப்படுகிறது. ஆனல் நாம் சிந்துக்குப் போகத் தயாரில்லை" என்று அக்திகள் சொல்லுகின்றனர்.


## "ஆஸாத்"

(தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.)

தற்கால அரசியல் அறிவு வளர்ச்சியடைய அவசியம் படிக்கவேண்டும். சிக்கலான அரசியல் உலகத்தில் இன்று 'ஆஸாத்' சமூகத்தை நேரான பாதையில் முன்னேறச் செய்கிறது. சொற்ப காலத்தில் புது அரசியல் உணர்ச்சியை எங்கும் உண்டாக்கியிருப்பதை தாங்கள் கவனித்திருக்கலாம். உங்கள் ஊரில் 'ஆஸாத்' ஏஜென்ஸி இல்லாமல் இருந்தால் ஏஜென்ஸி எடுத்துக் கொள்ளுங்கள். இது உங்கள் தேசீயக் கடமை. 'ஆஸாத்' சந்தாதாரர்களாக ரூ. 6. (ஆறு) மணியார்டர் மூலம் அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள்.

மானேஜர்,
"ஆஸாத்"
கும்பகோணம்.

# கடிதங்கள்.

## அரந்தாங்கி.

உங்கள் 'ஆஸாத்' தமிழ் தேசிய வார வெளியீடு களைப் பார்த்தேன். நன்றாகவும் தெளிவாகவும் விளங் கக்கூடிய முறையில் அரசியல், ஹிந்து முஸ்லிம் கட மைப் பற்றி வெகு அழகாக எடுத்துக்காட்டியிருக்கிறீர் கள். மேலும் தமிழ்நாட்டில் வகுப்புவாத மதவெறி யர்களுக்கு பத்திரிகை வாயிலாக ஜவாப்கொடுக்கயாரு மில்லையேயென எண்ணிக்கொண்டிருந்தேன். அதிர்ஷ் டவசமாக 'ஆஸாத்' தமிழ் நாட்டுக்கும், மத வெறியர் களுக்கும் பதவி மோகஸ்தர்களுக்கும் நல்ல வழிகாட் டும் என்றும் எல்லாம் வல்ல இறைவனைக் கேட்டுக் கொள்கிறேன்.

M. கல்யாணசுந்தரம்,
தலைவன் அ. தா. கா. கமிட்டி

O O O

## மணப்பாரை.

15—4—48 மணப்பாரை கோவாப்பரேட்டிவ் கிரெடிட் ஸொஸைடியின் கூட்டம் தலைவர் M. ராஜ கோபால் நாயுடு தலைமையில் நடந்தது. அங்கத்தினர்க ளும் ஸ்தல காங்கிரஸ் அன்பர்களும்கலந்து கொண்ட னர். உலகம்போற்றும் உத்தமர் அஹிம்சாமூர்த்தி, அர சியல் அறிஞர், தேசத்தந்தை, காந்திஜி அவர்களின் அகால மரணத்திற்கு அனுதாபத்தை தெரிவிக்க அனை வரும் இரண்டு நிமிஷ நேரம் எழுந்துநின்று, அண்ண லின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனைக்குப்பின் மற் றும் பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றி N. தனபால் நாயுடு அவர்களால் வந்தனோபசாரம் கூறப் பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

M. அஹமதுஷரீப் சாயபு
தலைவர், குளித்தலை தா. கா. கமிட்டி, மணப்பாரை.

O O O

## குடந்தை

காந்திய சோஷலிஸ்ட் ஊழியர் கழகம், கமலா நேரு வாசகசாலை, தேசிய சன்மார்க்க வாலிபர் சங்கம், சுபாஷ்போஷ் வாலிபர் சங்கம், (எலுமிச்சங்காபாளை யம்) சார்பாக C. சாமிநாத செட்டியார் தலைமையில் தேசியவாரதினம் கொண்டாடப்பட்டது. அதுசமயம் பெங்களூர் அஸ்மத்துல்லா M. A. அவர்களும், K. V. நாகமணி அம்மாள் அவர்களும் பல காங்கிரஸ் ஊழியர்களும் பேசினார்கள்.

M. அப்துல் சத்தார்.

## பாலக்காடு

தமிழ்நாட்டில் இன்று நடத்தப்படும் சில பத்தி ரிகைகள், தங்கள் சொந்த நலன்களுக்காகவும், தங்கள் சமூகத்திற்காகவும், தங்கள் கட்சிகளுக்காகவும் பாடு படுகின்றன. ஆனால் தங்கள் பத்திரிகை அவ்வகையிலல் லாமல், பொதுவாக தமிழ்நாட்டுக்கு சேவை செய்ய முன்வந்திருப்பது பாராட்டுதற்குரியது.

காந்தீயமும், அபேதவாத கொள்கைகளையும் கடைப்பிடித்து நடத்தப்படும் தங்கள் லட்சிய பத்தி ரிகை உள்ளதை உள்ளபடி எந்த கட்சியானாலும் மனங்கலங்காமல் கூறுவதைப் பெரிதும் பாராட்டு கிறேன். தமிழ்நாட்டிலுள்ள மற்ற பத்திரிகைகளுக்கு வழிகாட் டியாகவிருக்கும் தங்கள் லட்சியப்பத்திரிகை தமிழ் நாட்டாருக்கு பல்லாண்டு சேவை செய்ய வேண்டுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டு கிறேன்.

இ. அ. அப்துல் வஹாப்

O O O

## அதிராம்பட்டணம்

### தேசீய வார விழா.

16—4—48ல் அதிராம்பட்டணத்தில் கொண் டாடப்பட்டது. பஞ்சு கொட்டுதல், நூல் நூற்றல், போட்டிகள் நடைபெற்றன. கும்பகோணம் ஜனப் யாகூப்கான் அவர்கள் தலைமையில் நூல் நூற்ற முஸ்லிம் பெண்மணிகளுக்கு பரிசுகள் வழங்கப் பட்டன. மாலை 5 மணிக்கு ஜனப் இ. க. முகம்மது இஸ்மாயில் தலைமையில் விழா ஆரம்பமாயிற்று. ஜனப் யாகூப்கான் தேசியக் கொடி யேற்றி வைத்தார். சிதம்பரம் ஸ்ரீ பூவராகமூர்த்தி மகாத்மாஜியின் படத்தை திறந்துவைத்து நிர்மாணத் திட்டத்தின் அவசியம் பற்றி சொற்பொழி வாற்றினர். கும்ப கோணம் 'ஆஸாத்' ஆசிரியர் ஜனப் மௌலானா அப் துல் ஹக்கீம் அபுல் கலாம் ஆஸாத் அவர்களின் சேவையைப் பற்றியும் இந்திய பிரிவினையால் முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களைப் பற்றியும் சொற்பொழிவாற்றினர். கீரலத்தூர் ஸ்ரீ க. மீனாக்ஷி சுந்திரம் பிள்ளை அவர்கள் ஜவஹர்லால் நேருவின் படத்தை திறந்து வைத்தார். இரவு 10-30 மணிக்கு காங்கிரஸ் கமிட்டி தலைவர் S. S. இப்ராகீம் வந்த னோபசாரம் கூறியபின் கூட்டம் இனிது முடிவுற்றது. தம்பிக்கோட்டை நேதாஜி வாலிபர் சங்கத்தின் தொண்டர் படையினர் வந்திருந்து சிறப்பாக தொண் டாற்றியது போற்றத்தக்கது.

## 'ஆஸாது' க்கு பணமுடிப்பு

முடிவில் நகரவாசிகளின் சார்பாக 'ஆஸாத்' பத்திரிகையின் வளர்ச்சிக்காக ஆசிரியரிடம் ரூ 101 கொண்ட பணமுடிப்பு அளிக்கப்பட்டது. "நான் அநேக பத்திரிகைகளை படிக்கிறேன் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்தி பாரபட்சமற்ற முறையில் வகுப்புவாத பிற்போக்காளர்களைக் கண்டித்து பாமர இந்தியர்களுக்கு அரசியல் அறிவு ஊட்டும் வேலையில் 'ஆஸாத்' எல்லா பத்திரிகைகளையும்விட முன்ன்னியில் இருக்கின்றது என்று ஸ்ரீ உப்பு பூவாகமூர்த்தி பாராட்டினர். "ஆஸாத் பத்திரிகையைப் படித்து உண்மையை உணர்ந்து முஸ்லிம்கள் தேசீயத்தின் அவசியத்தை உணர்ந்து வருகின்றனர் என்றும் ஹிந்து முஸ்லிம்களிடையே இருந்துவந்த மனக்கசப்பு 'ஆஸாத்' பெருமளவுக்கு குறைத்துவிட்டதென்றும் வெகு குறுகிய காலத்தில் தமிழ்நாட்டு ஹிந்து முஸ்லிம்களை ஐக்கியப்படுத்தி தேச முன்னேற்றத்திற்காக உழைக்க அவர்களை முன்னணிக்குக்கொண்டு வந்து நிறுத்துமென ஆஸாதை தான் நம்புவதாகவும் பேசினர்.

○ ○ ○

## திருக்கோயிலூர்.

தற்சமயம் நமது திருக்கோவிலூர் தாலுக்கா ஏழை மக்களுக்கும், தொழிலாளி மக்களுக்கும், உணவு தானியம் கிடைக்காமல் மிகவும் வாடுகிறார்கள். அறுபதுபடி நெல் மூட்டை ரூ. 20-க்கும் கிடைக்காமல் தவிக்கின்றனர். மக்களின் கஷ்டத்தை நிவர்த்திக்கவும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு உணவு தானியம் கிடைக்கச் செய்யவும் ஒவ்வொரு கிராமத்திலும் சகாயவிலை டிப்போ ஏற்படுத்தி வினியோகிக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

J. D. ஜலாலுத்தீன்,
தலைவர் தி. ந. கா. கமிட்டி.

○ ○ ○

14—4—48 மாலை 6-மணிக்கு தேசீயவார விழா கூட்டம் S. A. தேவநாயக ஐயா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நெல்லிக்குப்பம் ஜனப் ஷெரீப் சாயபு தெ. கா. ஜி. கா. க. காரியதரிசி ஸ்ரீ கிருஷ்ணசாமி படையாச்சி, பரமானந்தம் பிள்ளை ஆகியோர் தேசிய வாரத்தைப்பற்றியும், ஜவஹர்லால் நேருவைத் தலைவராய்க்கொண்ட சர்க்காரைப் பலப்படுத்தவும், காங்கிரஸ்காரர்களாகிய நாம் இனி வகுப்புவாதம், பிற்போக்கு சக்திகளை முறியடித்து நவ இந்தியாவை ஜாக்கிரதையுடன் பாதுகாக்கவேண்டுமென்றும், மகாத்மா காந்தி நினைவு நிதிக்காக தாராளமாய் உதவும்படியும் சொற்பொழிவாற்றினார்கள். ஸ்ரீ ராமசாமி நாயக்கர் வந்தனோபசாரம் கூற கூட்டம் கலைந்தது.

J. D ஜலாலுதீன்.
தலைவர் தி. ந. கா. கமிட்டி,

○ ○ ○

## புளியம்பட்டி

மௌலானா அஸ்ஸலாமு அலைக்கும். 21—4—48

அறியாமைப் படுகுழியில் முஸ்லிம்கள் விழுந்து தவிக்கும் இச்சமயத்தில் உங்கள் ஆஸாத் உற்ற வழிகாட்டியாக வெளிவந்துள்ளது. பொதுவாக இந்திய முஸல்மான்களுக்கும் குறிப்பாக சென்னை மாகாண முஸ்லிம்களுக்கும் நிச்சயமாக நேர்வழியில் கொண்டு செல்ல 'ஆஸாத்' முயற்சிக்குமென பரிபூரணமாய் நம்புகின்றேன். தன்னுடைய முயற்சியில் ஆஸாத் வெற்றி அடையுமென்பது திண்ணம். நேற்றுவரை நமக்குத்தெரியாமலிருந்த பல விஷயங்கள் உண்மைகள் 'ஆஸாத்' மூலம் நாம் தெரிந்துகொண்டோம். முஸ்லிம்களுக்கு நேர் வழி காட்டி ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை நிலைநாட்டுவது 'ஆஸாதின்' லட்சியங்களாக இருப்பதால் கலவரங்களை கண்ணுறும்படியான துரதிர்ஷ்டமான நேரம் நமக்கு வாதென்று நம்புகிறோம். உங்கள் 'ஆஸாத்' நாளுக்கு நாள் சகல துறைகளிலும் வளர்ச்சி அடைய பிரார்த்திக்கின்றோம்.

S. V. ஸையத் இப்ராஹீம்,
பஞ்சாயத்து போர்டு, வைஸ் பிரஸிடெண்ட்


## ஆஸாத் வாசகர்களுக்கு

சந்தா துகை அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் வருட சந்தா ரூபாய் 6/- மணியார்டர் மூலம் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

**ஆஸாத் ஒரு லட்சியப் பத்திரிகை.**
**அதை ஆதரிப்பது உங்கள் தேசீயக் கடமை.**

**மானேஜர், ஆஸாத், குடந்தை.**

# சிவாஜியும், ஔரங்கசீப்பும்.

ஆங்கில சரித்திராசிரியர்களின் பேனு முனை சூழ்ச்சி இந்திய சரித்திரத்தை திரித்து எழுதி இழைத்த தீங்கின் விளைவுகளை இன்றைக்கும் நாம் அனுபவித்து வருகின்றோம். சிவாஜி மஹாராஜாவுக்கும், ஔரங்கசீப்புக்கும் அரசியல் காரணங்களுக்காக நடந்த யுத்தத்தை ஹிந்து, முஸ்லிம் யுத்தமென்று ஆங்கிலேயர்கள் எழுதி பிரகாசமான இந்திய சரித்திரத்திற்கே களங்கத்தை ஏற்படுத்திவிட்டனர். சரித்திர பூர்வமான பல சம்பவங்கள் அவ்விருவரில் யாரும் மதவெறியனுக இருக்கவில்லையென்பதை எடுத்துக் காட்டுகின்றன.

சிவாஜி மஹாராஜாவின் உண்மையான நிலைமையை தெளிவாக எடுத்துக்காட்டும் பல விஷயங்களில் மிஸ்டர் ஸ்மித் எழுதியிருக்கும் ஒரு சம்பவம் முஸ்லிம்களுடன் அவருக்கிருந்த நல்லெண்ணத்தை எடுத்துக் காட்டுவதாயிருக்கின்றது.

ஒரு யுத்தத்தில் சிவாஜி மஹாராஜாவுக்கு முஸ்லிம்களின் வேதமான திரு குர் ஆனின் ஒரு பகுதி கிடைத்தது. அதை அவர் பயபக்தியுடன் எடுத்து, தன்னிடம் பத்திரமாய் வைத்துக்கொண்டார். பிறகு தன்னுடைய சேனையிலிருந்த ஒரு முஸ்லிமிடம் அதை ஒப்படைத்துவிட்டார்.

இந்த சம்பவம் சிறிய சம்பவமாக இருப்பினும் சிவாஜி மஹாராஜா முஸ்லிம்களின் வேதத்தை கௌரவித்தார் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன் அவருடைய சேனையில் முஸ்லிம்களும் இருந்தனர் என்பது இதனுல் வெளிப்படுகின்றது. இம்மாதிரியான ஒரு சமதர்ம வாதியை மத வெறியனென்று ஆங்கிலேயர்கள் எழுதி வைத்தது, இந்தியாவுக்கு அவர்கள் இழைத்த பெரிய தீங்காகும்.

உண்மையில் சிவாஜியின் பாட்டனுன மாலூஜி, ஹஸ்ரத் ஷாஹ் ஷரப் ரஹ்மதுல்லாஹி அலைஹ் என்ற ஒரு முஸ்லிம் பெரியாரின், சிஷ்யராக இருந்தார். அப் பெரியாரின் சமாதி இன்று வரை அஹ்மத் நகர் கோட்டையில் இருந்து வருகின்றது மாலூஜிக்கு அவரிடம் அபார நம்பிக்கை உண்டு. உயிருடன் இருந்தவரை ஷாஹ் ஷரபை நாள் தவருமல் தரிசித்து வந்தார். மாலூஜிக்கு குழந்தை யிருக்கவில்லை. ஒரு நாள் "ஹஜரத்! எனக்கு சந்ததியில்லை. நீங்கள் பிரார்த்தித்தால் ஆண்டவன் அதை ஏற்று என்னுடைய ஆசையை பூர்த்தி செய்வார்" என்று வேண்டினர். ஷாஹ் ஷரப் ஆண்டவனைப் பிரார்த்தித்தார். அதன் பிறகு மாலூஜிக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன. ஆசானிடமிருந்த அபார பக்தியின் காரணமாக மூத்த குமாரனுக்கு ஷாஹ்ஜி என்றும், இளைய குமாரனுக்கு ஷரப்ஜி என்றும் பெயரிட்டார். பிற்காலத்தில் ஷாஹ்ஜி, ஸாஹுஜியாக விளங்கினர். அவருடைய குமாரர்தான் சிவாஜி.

ஔரங்கசீப் ஹிந்துக்களின் எதிரி என்று சொல்லப்படுகிறது. கோயில்களை இடித்து மசூதிகளை கட்டியதாக வெள்ளையர்கள் சரித்திரத்தில் எழுதி வைத்திருக்கின்றனர். பிரசித்தி பெற்ற லெப்டினன்ட் கர்னல் D. C. பிளிட் காசிக்குச் சென்றபொழுது அங்கு அவருக்கு ஔரங்கசீப், காசியில் கவர்னராயிருந்த அபுல் ஹஸனுக்கு, அனுப்பியிருந்த தாக்கீது ஒன்றின் நகல் கிடைத்தது. ஹிந்துக்களுக்கு ஔரங்கசீப் மீது நல்ல எண்ணம் இல்லாமல் இருந்தது பிளிட்டுக்குத் தெரியும். ஆகையால் அசல் (Original) கிடைக்காதவரை நகல் பிரயோஜனப் படாதென்று D. C. பிளிட் முடிவு செய்தார். காசியின் கொத்துவாலாக இருந்த கான் பாதுர் ஷேக் தையிப் உதவியால் அசலும் தேடியெடுக்கப்பட்டது. அதில் இளவரசர் முஹம்மத் சுல்தானின் முத்திரை யிருந்தது. D. C. பிளிட் அதை இங்கிலாந்து பத்திரிகைகளிலும் பிரசுரித்திருக்கிறர். அதன் வாசகம் பாரசீக பாஷையில் இருக்கின்றது. அதன் மொழி பெயர்ப்பு கீழே தருகின்றோம்.

"ஷரீயத்தின் புனித சட்டம் புதிய கோயில்கள் கட்டுவதை அனுமதிக்கவில்லை. ஆயினும் பழைய கோயில்களை இடிக்கவும் சொல்லவில்லை. காசியிலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசத்திலும் பழைய கோயில்களின் புரோகிதர்களாக இருந்துவரும் ஹிந்துக்கள், பிராமணர்களை மிரட்டி அவர்களுடைய புரோகிதத் தொழிலிலிருந்து நீங்கும்படியாக சில அதிகாரிகள் நிர்பந்தித்து வருவதாக நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. அதன் பயனுக புரோகிதர்கள் நிம்மதி யிழப்பதைத் தவிர வேறு பலன் ஒன்றும் ஏற்பட முடியாது. ஆகையால் இந்த தாக்கீது கிடைத்த மாத்திரத்திலே உங்கள் பிரதேசத்தில் உள்ள பிராமணர்கள், ஹிந்துக்களுடன் எவ்விதத்திலும் யாரும் முறைதவறி நடந்து கொள்ளாமல் இருக்கும்படி நடவடிக்கை எடுக்க உங்களுக்கு (அபுல் ஹஸன்) உத்திரவிடப்படுகிறது. புரோகிதர்கள் வழக்கம்போல் அவ

ரவர்களுடைய ஸ்தானத்தில் இருந்து அவரவர்களுடைய வேலைகளை நிம்மதியுடன் செய்யவும் நமக்கு ஆண்டவன் அருளிய ஆட்சியின் முன்னேற்றத்திற்காக பிரார்த்திக்கவும் அவர்களுடைய நிம்மதி குலையாமல் பாதுகாக்கப்பட வேண்டியதவசியம். இத்துறையில் இந்த தாக்கீதை அதி முக்கியமாக கொள்ள வேண்டும் ஹிஜிரி 1209 ஜமாதியுஸ்ஸானி, 15ல

சிவாஜியையும், ஔரங்கசீப்பையும் மதவெறியர்கள் என்று சொல்லுபவர்கள் இம்மாதிரியான அநேக சம்பவங்களை வேண்டுமென்றே அலட்சியம் செய்து விடுகின்றனர்.

## ஜோன்பூர் பிராமணப்பெண் சம்பவம்

முன்ஷி ஸுஜஹான் ராய் பிரபல சரித்திர ஆசிரியர்களில் ஒருவர். 'குலாசதுத்தாரிக்' என்ற புத்தகம் அவருடைய நேர்மைக்கும் பாரபட்சமற்ற தன்மைக்கும் ஒரு எடுத்துக்காட்டு. ஔரங்கசீப்பைக் குறித்து ஸ்ரீ ராய் எழுதியுள்ள பல சம்பவங்கள் ஔரங்கசீப்பை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன. ஔரங்க சீப் ஆட்சியை சித்தரித்துக் காட்டக்கூடிய கீழ்வரும் சம்பவத்தை ஸ்ரீ ராய் எழுதியுள்ளார்.

ஜோன்பூர் பிராமணப்பெண் ஒருத்திமீது ஜோன்பூர் பிரதம முஸ்லிம் அதிகாரியின் கண்ணோட்டம் விழுந்தது. அந்த பெண்ணை கலியாணம் செய்துகொள்ளுவதற்காக சாத்தியமான சகல முயற்சிகளும் செய்தான். அவளுடைய தகப்பனைக் கூப்பிட்டு பணத்தைக் கொடுப்பதாக ஆசை காட்டினான். அதிகாரத்தைக் கொண்டும் மிரட்டினான். எதற்கும் பிராமணன் அசைந்து கொடுக்காமல் போகவே அதிகார தோரணையில் அந்த குடும்பத்தையே நெருக்க ஆரம்பித்தான். கிழட்டு பிராமணன் ஜோன்பூரைச் சேர்ந்த சில பிரபலஸ்தர்களைக் கொண்டு அந்த முஸ்லிம் அதிகாரியை சமாதானம் செய்ய முயற்சித்தான். ஆயினும் அவன் வழிக்கு வரவில்லை. பிராமணன் ஜோன்பூரை விட்டு புறப்பட்டு டில்லியடைந்து ஔரங்கசீப்பிடம் நடந்ததைச் சொல்லி தன்னுடைய கௌரவத்தைக் காக்கும்படியாக முறையிட்டான் இதைக் கேட்ட மாத்திரத்திலேயே ஔரங்கசீப்பின் கண்கள் சிவந்தன. உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் தன்னுடைய மகளை ஜோன்பூர் அதிகாரி பலவந்தப் படுத்துவானென்றும் பிராமணன் எடுத்துரைத்தான். சக்கரவர்த்தி எல்லா வேலைகளையும் அப்படியே விட்டுவிட்டு தன்னுடைய அந்தரங்க ஆலோசகரை மாத்திரம் அழைத்துக்கொண்டு ஒட்டகத்தின்மீது ஏறி ஜோன்பூரை நோக்கி புறப்பட்டார் நாட்களில் செல்ல வேண்டிய தூரத்தை மணிக்கணக்கிலே கடந்து நான்கு தினங்களில் ஜோன்பூர் அடைந்தார். சக்கரவர்த்தியின் எதிர்பாராத விஜயத்தால் ஜோன்பூர் மக்கள் ஆச்சரியப்பட்டனர் விஷயத்தை விஜாரித்தறிந்து பிராமணன் கூறிய அனைத்தும்உண்மையென்று நிரூபணமானபிறகு அந்த முஸ்லிம் அதிகாரிக்கு படிப்பினைக்குரியவிதத்தில் மரண தண்டனை விதித்து அவன் மறைத்து வைத்திருந்த பெண்ணை பிராமணனிடம் ஒப்படைத்தார். பிராமணனை உற்சாகமூட்டும் முறையில் ஏராளமான பொருளையும் கொடுத்தார்.

வேற்றுமை வெறியர்கள் கடந்த காலத்தை எப்படி வேண்டுமானாலும் திரித்துக் கூறலாம். ஆனால் பாரபக்ஷமுறையில் விஷயத்தை ஊன்றி கவனிப்பவர்களுக்கு உண்மை விளங்காமலிருக்க முடியாது. ஒற்றுமையின்றி இரண்டு மனிதர்கள் ஒரு வினாடியும் சேர்ந்திருப்பது சாத்தியமில்லாதிருக்கையில் இரண்டு மாபெரும் சமூகங்கள் பல நூற்றாண்டுகள் ஒரு தேசத்தில் சகல துறைகளிலும் ஒன்றுபட்டு கூடிவாழ்வது சாத்தியமாயிருந்திருக்க முடியாது.

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் அரசாங்க உள்நாட்டு மந்திரி ஹானரபில் பஸ்லுர் ரஹ்மான் சாகிப், மிஸ் பாத்திமா ஜின்னா இருவரையும் பேட்டி கண்டனர். போலீஸார் அடித்ததும் துன்புறுத்தியதும் எடுத்துச் சொல்லப்பட்டது. கொடுமைக்குள்ளான முஸ்லிம் பெண்களின் தூது கோஷ்டி பாகிஸ்தான் செகரடேரியட்டில் நுழைந்த பொழுது அவர்களுடைய திரேகங்களில் காயம்பட்ட பாகங்கள் பாண்டேஜ் செய்யப்பட்டிருந்தன. புர்க்காக்களில் ரத்தக் கரைகளும் துணிகள் கிழிந்தும் இருந்தன. அவர்களில் மூன்று விருத்தாப்பிய பெண்களை நம்முடைய நிருபர் பார்த்தார். அவர்களுடைய மணிக்கட்டுகளும் தோள் பட்டைகளும் காயமுற்றிருந்தன. லத்திகளைக்கொண்டு தாக்கினது மட்டுமின்றி போலீஸார் சில பெண்களின் மார்புகளை நோக்கி முஷ்டிகளால் குத்தவும் செய்தனர் இந்த சம்பவத்தால் நகரத்தில் இயற்கையாக கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. கடைகள் மூடப்பட்டுவிட்டன. பொதுமக்களுக்கும் போலீஸாருக்கும் கைகலப்பும் நடந்தது."

# புனர் வாழ்க்கை.

## நம் அரசியல் போக்கு.

லக்னோ மஹா நாட்டில் முஸ்லிம் லீக் கலந்து கொள்ளாதது துரதிர்ஷ்டமே எனினும் அதனால் ஒரு விதத்தில், நன்மை ஏற்பட்டதென்றே சொல்லவேண்டும். நண்பர்கள் யார்? விரோதிகள் எவர்? என்று உணர்ந்துகொள்ள லக்னோ மஹா நாட்டுக்குப் பிறகு முஸ்லிம்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. இன்று, வகுப்புவாத அரசியல் உகந்ததல்ல. என்று வாயளவில் ஒப்புக்கொள்ளும் நிலைமைக்கு லீக் பிரமுகர்களும் வந்துவிட்டனர். ஆயினும், வகுப்புவாத இருளில் வெகுதூரம் முன்னேறிவிட்டபிறகு, ஜனநாயக நேர்வழிக்கு திரும்பிவர, அவர்கள் அசக்தர்களாகவே இருந்துவருகின்றனர். பொழுது புலர்ந்தது, சூரியன் உதயமாகிவிட்டான், என்று உணர்ந்தபிறகும், நீண்ட நாட்கள் வரை இருட்டில் பழக்கப்பட்ட தங்கள் கண்களைத்திறக்க அஞ்சுகின்றனர். சூரியவெளிச்சம் அவர்களுடைய கண்களை உறுத்தும் என்பது வாஸ்தவமே.

வகுப்புவாத அரசியலுக்கு முழுக்குப் போடும் விஷயத்தில், முஸ்லிம்களிடையே, இருவித அபிப்பிராயங்கள் இருந்துவருகின்றன. அவ்விரு அபிப்பிராயங்களுக்கும் இடையே உள்ள அடிப்படை வித்தியாசத்தை சரிவர புரிந்துகொள்ள வேண்டியதவசியம். இல்லையேல் மீண்டும் தவறுவது நிச்சயம்.

" அன்று, வகுப்புவாத அரசியல் நியாயமானதும், நன்மை பயக்கக்கூடியதாகவும் இருந்தது. ஆனால், மாறுதல் அடைந்திருக்கும் இன்றைய நிலைமையில், அதனால் பிரயோஜனம் ஏற்பட முடியாது. இனி அரசியலில் வகுப்புவாதம் தேவையில்லை " இது லீக் முஸ்லிம் அபிப்பிராயம்.

" வகுப்புவாத அரசியல் அடிப்படையிலேயே தவறானது. அதனால் தீமையே ஏற்படும். அன்றும், இன்றும், அது தீமையே விளைவித்திருக்கிறது. இனியும், அதனால் தீங்கே விளையும். அரசியலில் வகுப்புவாதத்தை புகுத்தியிருக்கக்கூடாது துரதிர்ஷ்டவசமாக, புகுத்தப்பட்டு விட்டதென்றாலும், சுதந்திர இந்தியாவில் வகுப்புவாதத்திற்கு அரசியலில் இடமிருக்கக்கூடாது" இது காங்கிரஸ் தேசிய முஸ்லிம்களின் அபிப்பிராயம்.

பீதி, அவநம்பிக்கை, மனத்தளர்ச்சியின் உற்பத்தியே லீகர்களின் அபிப்பிராயம். வகுப்புவாத அரசியலுடன், அவ்வித அபிப்பிராயத்தையும் சேர்த்து ஒழித்துக் கட்ட வேண்டும். இன்று முஸ்லிம் லீகை விட்டு வெளியேறி, காங்கிரசில் சேர்ந்து வரும் லீகர்களிடையே, பொதுவாக, அவ்வித அபிப்பிராயம் நிலவி வருகின்றது. அதை, வகுப்புவாதத்தின் புனர் வேஷம் என்றே சொல்லவேண்டும். உடனடியாக அந்த வேஷம் கலைக்கப்படவேண்டும். இல்லையேல் வகுப்புவாதம் ஒழிவதற்குப் பதிலாக, வளர்ந்து கொண்டுபோக சந்தர்ப்பம் கிடைத்துவிடும்

"பாகிஸ்தான் லட்சியம் கைகூடி விட்ட பிறகு இனி லீக் அவசியமில்லை எனவே, தங்களுடைய கடந்தகால போக்கை விட்டு, வகுப்புவாதமற்ற அரசியல் ஸ்தாபனங்களில் சேர்ந்து கொள்வதுதான் சரி", என்று லீக் வட்டாரங்களில் பேசப்படுகிறது. இந்த வாதம் வெளிப்படையில் நியாயமாகத் தோன்றினாலும், உண்மைக்கும் அதற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாதென்பது திண்ணம்.

முஸ்லிம்களின் அரசியல், கலாச்சார, மத, பாஷா உரிமைகளை பாதுகாக்க பாகிஸ்தான் ஒன்றே சிறந்த வழியென்று, முஸ்லிம் லீக் ஓயாமல் பிரசாரம் செய்து வந்தது. தங்கள் பிரசாரத்திற்கு சாதகமாக, மைனாரிடி முஸ்லிம் பிரச்னையை பிரயோஜனப்படுத்திக் கொண்டிருந்தது. இன்று முஸ்லிம் மெஜாரிடி பிரதேசங்கள் பாகிஸ்தானாக அமைந்து, அங்குள்ள முஸ்லிம்களின் மேற்கூறிய உரிமைகளுக்கு மட்டும் பாதுகாப்பு கிடைத்துவிட்டது என்று வைத்துக் கொண்டாலும், இந்திய மைனாரிடி முஸ்லிம்களின் நிலைமை என்ன? அவர்களுடைய உரிமைகளின் பாதுகாப்பு பிரச்னை தீர்ந்துவிட்டதென்று எப்படி சொல்லமுடியும்? உண்மையில் முன்பு இருந்ததை விட, இன்று அபாயம் அதிகரித்து விட்டதென்றல்லவா சொல்லவேண்டும்? எனவே, மைனாரிடி முஸ்லிம் பிரச்னை, முன்னைவிட, அதிக முக்கியத்துவமல்லவா பெற்றிருக்க வேண்டும்? அதற்கு நேர்மாறாக, இனி இங்கு முஸ்லிம் லீக் அவசியமில்லையென்று லீகர்கள் சொல்லுவதன் அர்த்தமென்ன? இந்நிலையில், இரண்டுவித முடிவுக்குத்தான் வரமுடியும். லீக் என்றுமே அவசியமாயிருக்கவில்லை என்பது

ஒன்று. அல்லது முன்பு இருந்ததைவிட இன்று லீக்கின் அவசியம் அதிகமாய்விட்டது என்பது இரண்டு.

உண்மையில், லீக் பிரமுகர்கள் உள்ளதைச் சொல்ல வெட்கப்படுகின்றனர், அல்லது பயப்படுகின்றனர். வகுப்புவாத அரசியல் ஸ்தாபனங்கள் எந்த வகுப்பாரின் உரிமைகளையும் பாதுகாக்க முடியாதென்ற உண்மையை, இன்னும் அவர்கள் உணராமல் இருப்பது சாத்தியமே. வகுப்புவாத ஆயுதம், தற்கொலை செய்துகொள்ள பிரயோஜனப்படுமேயல்லாது மற்றவர்களைப் பாதிக்காதென்பது உண்மை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆதரவும், சூழ்ச்சிகளும் திரையிட்டு மூடிவைத்திருந்த, வகுப்புவாதத்தின் நாசகரமான தன்மையை, நேற்றுவரைமக்கள் உணரவில்லையாயினும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் மூட்டை கட்டினவுடனே, இன்று ஒவ்வொருவரும் உணர ஆரம்பித்துவிட்டனர். முஸ்லிம் லீக் எப்பொழுதும் அவசியமாயிருக்கவில்லை. இன்றைக்கும் அது தேவையில்லை. முஸ்லிம்கள் வகுப்புவாத ஸ்தாபனங்களைக் கலைத்துவிட்டு, தேசிய முற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து, முன்னேற ஆரம்பித்த பிறகு, குறுகிய காலத்தில், வகுப்புவாத ஸ்தாபனங்கள் அவசியமில்லையென்று, ஹிந்து சீக்கியர்களும் உணரும்படியான நிலைமை ஏற்பட்டுவிடும். இந்தியாவில் வகுப்புவாத ஸ்தாபனங்களில் பல, வெள்ளையரின் பிரித்தாளும் சூழ்ச்சியால் ஏற்பட்டன. அவைகளுக்கு எதிராக, சில வகுப்புவாத பிற்போக்கு ஸ்தாபனங்கள் தோன்றின. தேசத்தில் வகுப்புவாதம் தலை தூக்கிவிட்டால், வகுப்புவாதத்தை வகுப்புவாதத்தைக் கொண்டே முறியடிக்கவேண்டும் என்ற எண்ணம், பொதுவாக மக்களிடையே ஏற்படுவது சகஜம். அது சரியல்ல என்பது உண்மையே. அதிர்ஷ்டவசமாக இன்று பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் மறைந்துவிட்டது. அத்துடன், வகுப்புவாத அரசியல் ஸ்தாபனங்களும் குழிதோண்டி ஆழப்புதைக்கப்படவேண்டும்.

எல்லோரையும் விட அதிகமாக, வகுப்புவாத ஸ்தாபனங்களுக்கு இலக்கானவர்கள் முஸ்லிம்களே. சிறுபான்மையோராக இருந்ததால், அவர்களிடையே வெகு சீக்கிரம் வகுப்புவாதம் பரவ முடிந்தது. மத உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, வெகு சுலபமாக, பிற்போக்கு வாதிகள் முஸ்லிம்களை பிரிட்டிஷ் சாம்ராஜ்யக்கருவிகளாக உபயோகித்து வந்தனர்- கடந்த 60 வருஷங்களில், பிற்போக்காளர்கள், முஸ்லிம்களை, ஏமாற்றி, மோசடிசெய்து, தவறுனவழியிலே இழுத்துச்சென்று, தாங்கொணுத்துன்பங்களுக்கு இலக்காக்கிய சம்பவங்கள், படிப்பினைக்குரிய நீண்ட கதையாகும்.

1885-ல் இந்திய தேசிய காங்கிரஸ் மஹா சபை ஸ்தாபிக்கப்பட்டது அதற்கு எதிராக, அலிகார் காலேஜில் பிரின்ஸிபாலாக இருந்த, மிஸ்டர் டியூடர் பெக் 1888-ல் 'இந்தியன் பேட்ரியாடிக் அஸோஸியேஷன்' ஏற்படுத்தினன். இந்திய தேசிய காங்கிரஸின் கோரிக்கைகளை எதிர்ப்பதே அதன் லட்சியம். காங்கிரஸை எதிர்ப்பதற்கென்றே ஏற்படுத்தப்பட்ட அந்த அஸோஸியேஷனில், பெருவாரியாக முஸ்லிம்களே சேர்க்கப்பட்டனர். பசு பலியை நிலை நிறுத்த ஒரு தீர்மானமும் அதில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

பேட்ரியாடிக் அஸோஸியேஷன் என்றபெயரில் முஸ்லிம்களின் மத உணர்ச்சியை தூண்டவும், அவர்களை ஆகர்ஷிக்கவும் போதுமான கவர்ச்சி இருக்கவில்லை எனவே 1893 டிஸம்பர் 3-ந் தேதி மிஸ்டர் பெக் அந்த அஸோஸியேஷனை கலைத்துவிட்டான். அதற்கு பதிலாக, 'முஹமடன், ஆங்கிலோ இந்தியன் அஸோஸியேஷன்' என்ற பெயருல் வேறு ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தினன். மிஸ்டர் டியூடர் பெக்கே அதன் காரியதரிசியாகவும் இருந்தான். ஸ்தாபனத் திறப்பு விழா பிரசங்கத்தில், "சில வருஷங்களாக, இந்தியாவில் இரண்டு கிளர்ச்சிகள் நடக்கின்றன. காங்கிரஸின் தேசியக் கிளர்ச்சி ஒன்று. பசுவதையை தடுக்க நடக்கும் கிளர்ச்சி இன்னென்று. காங்கிரஸ் கிளர்ச்சி ஆங்கிலேயர்களுக்கு எதிராகவும், பசுவதை கிளர்ச்சி முஸ்லிம்களுக்கு எதிராகவும் நடக்கின்றன. ஆங்கிலேயர்களிடமிருந்து அதிகாரத்தை கைப்பற்றி, ஹிந்துக்களிடம் ஒப்படைக்கவே காங்கிரஸ் விரும்புகின்றது. மக்களை ஆயுதபாணிகளாக்க வேண்டுமென்றும், ராணுவ செலவுகளை குறைத்து எல்லையை பலஹீனப்படுத்த வேண்டுமென்றும் சொல்லுகிறது. அடுத்தது பசுவதைக்கிளர்ச்சி. முஸ்லிம்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் புசிப்பதற்கு புலால்கிடைக்காமல் செய்வதே அதன் லட்சியம். இவ்விரு கிளர்ச்சிகளையும் அடக்க முஸ்லிம்களும், ஆங்கிலேயர்களும் ஒன்றுபடவேண்டும். ஜனநாயக ஆட்சிமுறை ஏற்பட்டுவிடாமல் தடுத்தாக வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சியின் உண்மையான விஸ்வாஸத்தை மக்களுக்கு ஊட்டப்படவேண்டும்." என்று மிஸ்டர் டியூடர் பெக் பேசினன்.

பசு பலியை காப்பதாகச்சொல்லி, முஸ்லிம்களை சேர்த்துக்கொண்டு, இந்திய சிவில் சர்வீஸ் பரீக்ஷைமுறை, தேசத்திற்கு சுய நிர்ணய உரிமை, ஜனநாயக ஆட்சிமுறை, இந்தியர்களுக்கு ஆயுதங்கள் வழங்குதல், உப்புவரி குறைவு முதலியன கூடாதென்றும், எல்லைப்புறத்தில் ராணுவச்செலவு அதிகரிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானங்களை நிறைவேற்றினன்.

1897-ல் பிரிட்டிஷார் எல்லைப்புறத்தில் கையாண்ட முறையை காங்கிரஸ் மஹாசபை எதிர்த்தது. ஆனல், மிஸ்டர் பெக்கின் அஸோஸியேஷனில்

சர் ஸையத் அஹமத்கான், ஆங்கிலேயர்களின் போக்கை பாராட்டினார் இந்தியாவின் பிரிட்டிஷ் படைகள் குறைவாக இருப்பதாகவும், உடனடியாக அதை அதிகரிக்க வேண்டுமென்றும் பிரிட்டிஷாரை கேட்டுக்கொண்டார்.

மிஸ்டர் பெக் மரணத்திற்குப் பிறகு, மிஸ்டர் மாரிஸன் அலிகார் காலேஜ் பிரின்ஸ்பாலாக நியமிக்கப்பட்டான். வகுப்புவாத அரசியலை தூண்டுவதிலும் மிஸ்டர் பெக்கின் வாரிசாகவே மாரிஸன் விளங்கினான்

"காங்கிரஸ் கோரும் ஜனநாயக ஆட்சியால் முஸ்லிம்கள் அழிய நேரிடும். முஸ்லிம்கள் நிலைத்திருக்க, காங்கிரசிலிருந்து விலகியிருப்பதுடன், எவ்வித நிபந்தனையுமின்றி, பிரிட்டிஷ் விஸ்வாசிகளாக இருப்பதுதான் சிறந்த வழி தங்களுடைய தலைவிதியைப் பிரிட்டிஷாரின் இஷ்டத்திற்கு விட்டுவிட்டால், பிரிட்டிஷ் அதிகாரிகள் ஹிந்துக்களுக்கு எதிராக கடந்த 25-வருஷங்களாக முஸ்லிம்களுக்கு சலுகைகள் அளித்து வருவதைப்போலவே, இனியும், அளித்துவருவர் என்று நான் உறுதி கூறுகின்றேன்," என்று 1900-ல் மிஸ்டர் மாரிஸன் பேசினான்.

1901-ல் 'முஹமடன் பொலிடிகல் ஆர்கனிஸேஷன்' என்ற மூன்றாவது வகுப்புவாத ஸ்தாபனத்தை, நவாப் விகாருல் முல்க் லக்னோவில் ஏற்படுத்தினார். முஸ்லிம்களை சீர்திருத்துவதும், பிரிட்டிஷ் ஆட்சி பலமடைந்து நிலைத்திருப்பதிலேயே முஸ்லிம் நலன் இருக்கின்றது, என்ற எண்ணம் முஸ்லிம்களிடையே பரப்புவதும், இந்திய தேசிய காங்கிரஸில் முஸ்லிம்களைச் சேரவிடாமல் தடுப்பதுமே அதன் லட்சியங்களாக இருந்தன.

காங்கிரஸ் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வந்த காலம் அது. நடுத்தர, படித்த, உணர்ச்சியுள்ள, முஸ்லிம் வாலிபர்கள் காங்கிரஸில் சேர்ந்து ஹிந்து வாலிபர்களுடன் தோளோடு தோளாக முன்னேறிக் கொண்டிருந்தனர். பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சூட்சியால் 'முஹமடன் பொலிடிகல் ஆர்கனிஸேஷன்' ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் பகிரங்கமாக முஸ்லிம் வகுப்புவாதத்தை ஆதரிக்கக்கூடிய நிலைமையில் சாம்ராஜ்யம் இல்லாமல் இருந்த காரணத்தால் ஆர்கனிஸேஷன் நாலைந்து வருஷங்களுக்குள் நாதியற்ற நிலைமையில் மறைந்துவிட்டது.

1902-3ல் வங்காளம் தேசிய போராட்டத்தின் முன்னணியில் இருந்தது. பகிரங்கமாக அந்நிய ஆதிக்கத்தை வங்காளிகள் எதிர்க்க ஆரம்பித்திருந்தனர். வங்காள அரசியல் விழிப்பை நசுக்குவதற்காக 1905-ல் வங்காள பிரிவினைத்திட்டம் (அதாவது சிட்டகாங், டாக்கா, மைமன்ஸிங் ஜில்லாக்களை வங்காளத்திலிருந்து பிரித்து அஸ்ஸாமுடன் இணைக்கும் திட்டம்) வெளியிடப்பட்டது. இந்த யோஜனை வெளிவந்த மாத்திரத்திலே வங்காளமக்கள் கொந்தளித்தனர். தங்களுடைய வங்காளத் தாயகம் பிரிக்கப்படுவதை ஆட்சேபித்து முஸ்லிம்களும், ஹிந்துக்களுடன் சேர்ந்து பிரிட்டிஷாரை எதிர்த்தனர். கவர்னர் ஜெனரலாயிருந்த லார்டு கர்ஸன் உடனே டாக்காவுக்கு ஓடினான். டாக்கா முஸ்லிம்களின் ஒரு கூட்டத்தில், "வங்காள பிரிவினையால் வங்காள சர்க்காரின் நிர்வாகச் சுமையை குறைப்பதுமட்டும் நோக்கமல்ல. முஸ்லிம் மெஜாரிடி ஜில்லாக்களை அஸ்ஸாமுடன் இணைத்து முஸ்லிம் மெஜாரிடி மகாணம் ஒன்று ஏற்படுத்தி முஸ்லிம்களுக்குக் கொடுக்க வேண்டுமென்மென்பதே என் லட்சியம்" என்று பேசினான். பசப்பு வார்த்தைகளால் வகுப்புவாத பூதம் சுலபமாக முஸ்லிம்களின் தலைக்கு ஏறிவிட்டது. வங்காளஹிந்து சகோதரர்களை விட்டுப்பிரிந்து அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியுடன் சேர்ந்துவிட்டனர். அச்சமயத்திலும் சிந்தனை சக்தியுள்ள, அறிவுள்ள முஸ்லிம்களின் கூட்டம் இருக்கத்தான் செய்தது. முஸ்லிம்கள் சாம்ராஜ்யத்தின் கைப்பொம்மைகளாய் கூத்தாடுவதை அவர்கள் கண்டித்து வெறுக்கத்தான் செய்தனர். ஆயினும் அவர்களுடைய குரல் பலஹீனக் குரலாகவே இருந்தது. வெள்ளை வலையில் சிக்கிவிட்ட முஸ்லிம்கள் அதற்கு செவிசாய்க்கவில்லை

1905 அக்டோபர் 16-ல் வங்காள பிரிவினை பிரகடனம் செய்யப்பட்டது. அப்பொழுது இந்தியாவுக்கு சில சீர்திருத்தங்கள் வழங்கப்படுவதற்காக இருந்தன. அதற்கு முன் இந்தியாவில் வகுப்பு வேற்றுமையைத் தூண்டி ஹிந்து முஸ்லிம் பிணக்கு ஏற்படுத்திவிட வேண்டிய அவசியத்தை பிரிட்டிஷார் உணர்ந்தனர். அலிகார் காலேஜ் பிரின்ஸிபால் மிஸ்டர் ஆர்ச் போல்டு மூலம் முஸ்லிம் பிற்போக்கு வாதிகள், வகுப்புவாதிகள், கன்ஸர்வேடிவ்களை வைஸ்ராய் தூண்டினார். முஸ்லிம்கள் சார்பாக வைஸ்ராயிடம் சமர்ப்பிப்பதற்கென வைஸ்ராயின் அந்தரங்க காரியதரிசி கர்னல் டன்லாப் ஸ்மித்தினால் விண்ணப்பம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அதில் கூட்டுத் தொகுதியை ஆட்சேபித்து தனித்தொகுதி முறை வேண்டுமென்றும் வழங்கப்படவிருந்த சீர்திருத்தங்களை ஆட்சேபித்து ஜன நாயக ஆட்சி முறை இந்தியாவுக்கு எவ்விதத்திலும் உகந்ததல்ல என்றும் முஸ்லிம்கள் அதை ஏற்க முடியாதென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த விண்ணப்பத்தை வைஸ்ராயிடம் சமர்ப்பித்த தூது கோஷ்டிக்கு ஹிஸ் ஹைனஸ் ஸர் ஆகாகான் தலைமை தாங்கினார். தங்கு தடையின்றி வைஸ்ராயால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தூது கோஷ்டியின் வெற்றியைக் குறித்து இங்கிலாந்தில் சந்தோஷம் பொங்கிற்று. இங்கிலாந்து பத்திரிகைகள் முஸ்லிம்களின் விஸ்வாஸத்தையும் தீர்க்க தரிசனத்தையும் பாராட்டி புகழ்ந்தன. (தொடரும்)

வந்தேமாதரம்! ஜெய்ஹிந்த்!!

இது ஒரு அறிவிப்பு பிரகடனமல்ல

சுதந்திர இந்தியாவில் தென்னாட்டில்

— குடந்தை நகரில் —

# ஹிந்த் காமன் வெல்த் கார்ப்பரேஷன் லிமிடெட்,

ஓர் பொதுஜன வியாபார ஸ்தாபனம்.

(1913-ம் வருஷத்திய இந்திய கம்பெனி சட்டப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ 10,00,000 (பத்து லக்ஷம்)

தற்போதைய வெளியீடு ரூ 5,00,000 (ஐந்து லக்ஷம்)

(பங்கு ஒன்றுக்கு ரூ 10 வீதம் 50,000 சாதாரண பங்குகள் கொண்டது.)

இந்திய சரித்திரத்திலேயே தென் இந்தியாவில் முதன் முதலாக தேசிய சர்க்கார் திட்டம், கொள்கைகளைத் தழுவி, சோஷியலிஸ்ட் கூட்டு முறையில் விவசாயம், குடிசைத் தொழில், கைத்தொழில், வியாபார அபிவிருத்தி செய்வதே எமது லட்சியம்.

இந்நாட்டின் விவசாயிகள், உற்பத்தியாளர்கள், தொழிலாளர்கள், மிராசுதார்கள், வியாபாரிகள், முதலாளிகள் மற்றும் பொது ஜனங்கள் பலரும் ஈடுபட்டு பங்கெடுத்து, ஒத்துழைத்து நாடும் நாட்டினரும் முன்னேற்றமடையச்செய்யவேண்டுகிறோம்.

கம்பெனியின் பிராஸ்பெக்டஸ், பங்கு விண்ணப்ப பாரம், மற்றும் விபரங்களுக்கு எழுதவும்.

HIND COMMON WEALTH CORPORATION Ltd.,

Managing Agents: CHANDRA & Co., கும்பகோணம்

Town High School North, KUMBAKONAM. (South India)



# "வானிஷ்"

கரப்பான், சொறி சிரங்கு, பித்தவெடிப்பு, முகப்பருவிற்குச் சிறந்தது.

மணி நேஷனல் பார்மஸி, காரைக்குடி,



ஆர். ஜி. கம்பெனியாரின் "ரோமா"

ஓர் சிறந்த கூந்தல் டானிக்.

ஏஜண்டுகள் தேவை. ரெஹாக் பிரதர்ஸ், 13, ஒசிபித் ரோடு, மதராஸ் 18.


Printed by V. Jayaram at his Rama Printing Works, 129, E. Kadalangudi Street, Kumbakonam. Edited and Published by Moulana Abdul Hakeem, 13. K. South, Kumbakonam.